**கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2021**

கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II (பீ.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபைஇ இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாகவும் உள்ளன. கொழும்பு நீர்வடிநில வடிகாண்களில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் இயலளவை வலுப்படுத்துதல், தெரிவுசெய்யப்பட்ட நிரூபிக்கப்பட்ட முதலீடுகள் ஊடாக உள்ளூர் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்தி பராமரித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனானதுடன் அதில் ரூபா 27,890.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிக-ளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நிய-ாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு நிதிகளிலிருந்து 2016 தொடக்கம் 2021 வரை பொதுத்திறைசேரியினால் செலுத்தப்பட்ட ரூபா 2,251.65 மில்லியன் தொகையான வட்டி உலகவங்கி கடனின்கீழ் 2016 தொடக்கம் 2017 வரையான வருடத்துடன் தொடர்புபட்டவை மாத்திரமே ரூபா 223.82 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. மேலும் 2018 தொடக்கம் 2021 வருடத்துடன் தொடர்புபட்ட ரூபா 2,027.83 மில்லியன் தொகையான மிகுதி வட்டி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 2,027.83 | நிதிவருடம் 2016 & 2017 இற்கான கடன் வட்டி தொகை ரூபா 223.82 மில்லியன் திறைசேரி கூற்றின் ஊடாக எம்சீயுடிபி இற்கு அறிவித்திருந்ததுடன் 2016 & 2017 நிதி வருடத்திற்காக மாத்திரமே கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் திறைசேரியினால் வழங்கப்பட்டிராததுடன் செயற்திட்ட மட்டத்திலான எம்சீயுடிபி இன் நிதிக்கூற்று கடன் வட்டி கிரயத்தினை தவிர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் திறைசேறி – எஸ்எல் உடன் மீள்தொடர்பு கொள்ளப்படும். மேலும் தேவைப்பட்டால் கடன் இல 8145 – எல்கே மீதான வட்டியின் கணக்கீடு அதன்படி தாக்கம் செலுத்தும். | செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட அனைத்து கிரயங்களும் நிதிக்கூற்றுக்களில் முறையாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 வரையான சமநிலை சீராக்கம் எல்கேஏஸ் 21 இன் பந்தி 23 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக கடனின் கிடைக்கப்பெற்ற தொகைகளினது மீதி நிதிக்கூற்றுக்களில் அதே தெகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 7,864.89 | 2021 திசெம்பர் 31 வரையான சமநிலை சீராக்கம் எம்சீயுடிபி இன் நிதிக்கூற்றுக்களில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாறல் விகிதத்திற்கான கணக்கீட்டு கொள்கை மத்திய வங்கி கூற்றின் பிரகாரமான ஒவ்வொரு மீளப்பெறல் விண்ணப்பத்திற்குமான மத்திய வங்கி தெளிவாக்கிய மாறல் விகிதத்தின் பிரகாரம் செய்யப்பட்டிருந்தது. மேலும் நாங்கள் இலங்கை திறைசேரி, உரிய திணைக்களங்கள் என்பனவற்றுடன் விசாரணை செய்து அடுத்த நிதி வருடத்தில் சட்டபூர்வமாக தேவைப்பட்டால் புத்தகங்களில் கணக்கிடுவோம். | செயற்திட்டமானது இலங்கை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுடன் உடன்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பொதுச்சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆம் திகதிய சுற்றறிக்கை இல 01/2019 இன் பந்தி 09. | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டம் 02 மாதங்களிற்கு ஒரு தடைவ நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும் மிளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | கோவிட் 19 நோய்த்தொற்று பரவலினை தடுக்க விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டிகளின் காரணமாக பௌதீக கூட்டங்கள் 2021 ஆம் ஆண்டின் அனேக காலப்பகுதியில் நடாத்துவது சாத்தியமற்றதாக இருந்தது. | செயற்திட்ட கண்காணிப்பு குழு கூட்டங்கள் டீஎம்எஸ் சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடாத்தப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| இல | கூறு / உப கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | செயலற்றலின் கீழான கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | நோரிஸ் கால்வாயின் மேம்படுத்தல். | 100 | 85 | 15 | கொழும்பு மாநகர சபையின் காரணங்களின் காரணமாக இவ்விரண்டு தொகுதிகளிற்கும் முன்னால் நிர்மான நடவடிக்கைகளை வழங்க இரண்டு சீஎம்சி | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, செயற்திட்டமானது திட்டமிடப்பட்ட 55 உபசெயற்திட்டங்களில் 53 உபசெயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 2 உப செயற்திட்டங்கள்+ஜஎப்எம்எஸ் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இன்றுவரை ''நோரிஸ் கெனலின் மேம்படுத்தல்கள்'' உப செயற்திட்டம் | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை துரிதப்படுத்தவும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவினால் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கவணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகுதிகளையும் காலி செய்ய நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு செல்லவேண்டியிருந்தது. | மற்றும் ஜஎப்எம்எஸ் பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய அனைத்து உபசெயற்திட்டங்களும் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. ‘‘நோரிஸ் கெனலின் மேம்படுத்தல்கள்’’ உப செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதில் தாமதம் எம்சீயுடிபியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலான |
| (ஆ) | புதிய முகத்துவாரம் ரொறிங்ரன் சுரங்கத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம். | 100 | 97 | 3 | நாட்டின் முடக்கநிலை மற்றும் பல்வேறு இடங்களில் கோவிட் நோய்த்தொற்று பரவல் போன்றன காரணமாக இறக்குமதி செய்யப்படவேண்டிய பிரதான பொறி மற்றும் உபகரணம் தாமதமடைந்திருந்தது. சிக்கலான புவிவியில் நிலைமை காரணமாக | காரணங்களினால் ஆகும். சீஎம்சீ இவ்விரண்டு தொகுதிகளுக்கு முன்னால் நிர்மான நடவடிக்கைகளினை வசதியளிக்க 2 சீஎம்சீ தொகுதிகளினையும் காலிசெய்ய நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு போக வேண்டும். இருப்பினும் நோரிஸ் கெனலிற்காக செய்யப்பட்ட மேம்படுத்தல்கள் அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு குறிப்பிட்டளவு அதிகரித்திருந்தது. இருப்பினும் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு அடையப்படவில்லை. |
| (இ) | உண்மையான நேர கட்டுப்பாட்டு முறைமையின் (ஜஎப்எம்எஸ்) நிறுவல். | 100 | சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆர்பிசி முறைமை முழுமையாக பூர்த்திசெய்யப்படவில்லை. | உபகரணங்களிற்கான நாட்டின் இறக்குமதியின் தற்போதைய பொருளாதார நிலைமை காரணமான வறையரைகள். | |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைக |
|---|---|---|---|
| (அ) | உண்மையான நேர கட்டுப்பாட்டு நிலையம் (ஆர்டிசி) ஆனது ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மை முகாமைத்துவ முறைமையின் (ஐஎப்எம்எஸ்) குறிக்கோல்களை அடைய நிறுவப்பட்டிருந்ததுடன் அதன் பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் ஐந்து பிரதான முக்கிய கூறுகளினை உள்ளடக்குவதுடன் ஒரு பிரதான முக்கிய கூறு 2021 முடிவில் உள்ளவாறு அடையப்பட்டிருக்கவில்லை. அதன் மீது ரூபா 77.4 மில்லியன் மொத்த கிரயம் ஏற்பட்டிருந்ததுடன் உருப்படிகள் ஆர்டிசி முறைமையின் செயற்பாடுகளிற்காக ஏற்கனவே பெறுகை செய்யப்பட்டுள்ளது. ஆர்டிசி முறைமையானது காற்றடிக்கும் நிலைய செயற்பாடுகள் மற்றும் வாயில் செயற்பாடுகள் என்பனவற்றின் மையகட்டுப்பாட்டை கண்காணிக்கும் இயலுமை இல்லாமல் இயக்கப்பட்டது. மேற்பார்வை கட்டுப்பாட்டு மற்றும் தரவு கையகப்படுத்துதல் முறைமை (எஸசீஏடிஏ) பெறுகைகளின் பூர்த்தியின்மை காரணமாக இன்னும் நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக கடனில் மேற்கூறிய பெறுகை நடவடிக்கைகளிற்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தமுடியாமல் போகக்கூடும். | காற்றலை வீடுகளை மையப்படுத்தி கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தலின் ஒருங்கிணைப்பு மற்றும் ஆர்டிசி இலிருந்தான வாயில் நிலையங்கள் என்பன இன்னும் முழுமையாக நிறுவப்படவில்லை (மத்திய எஸசீஏடிஏ முறைமை). மேலும் இது எதிர்கால வேலை பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. பகுதியளவில் அடையப்பட்டது. இவ் உருப்படியில் இருந்து கூட கண்காணிப்பு கூறு செய்யப்பட்டிருந்தது. மேலும் மிகுதமாக உள்ள பகுதி மாத்திரமே மத்திய ஒருங்கினைப்பு வசதிகளின் தொலையியக்கி அடையப்படவில்லை. | கொள்வனவுகள் துரிதப்படுத்தப்பட வேண்டியதுடன் உரிய ஆர்டிசி முறைமை இற்றைப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ஓர் ஆலோசகர் 2017 ஆகஸ்ட் இலிருந்து உண்மையான நேர கட்டுப்பாட்டு முறைமையை விருத்தி செய்து நிறுவ பணிக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் 2020 ஜூன் 30 வரை ரூபா 32.9 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் ஆலோசகரின் சேவை வேலைகளை பூர்த்திசெய்யாமல் திடீரென கைவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு செயற்திட்டத்திற்கு ஆலோசகரிடமிருந்து கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | ஆலோசகரின் இடைநிறுத்தல் அந்நேரத்திலான அமைச்சிடமிருந்தான தீர்மானத்திற்கு மாறான செயற்திட்டத்தின் ஓர் தீர்மானம் இல்லை. ஆலோசகர் இடைநிறுத்தப்பட்டிருந்தும் ஆலோசகரின் சேவைகள் ஆலோசனை காலத்தின் போது அனைத்து பெறுகைகளும் அனேகமாக ஆரம்பித்திருந்ததால் பெரும்பாலும் முழுமையாக எடுக்கப்பட்டிருக்கலாம். மேலும் பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட கூறுகளிற்காக கூட ஆலோசகர் அதனுடன் தொடர்புபட்ட சோர்சிங் இன் சில வேலைகளை ஆரம்பித்துள்ளார். | திடகாத்திரமானதும் வினைத்திறனானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமையானது செயற்திட்ட நடவடிக்கைகளை உரிய நேரத்தில் பூர்த்திசெய்வதனூடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைய அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டமானது 2018 ஆகஸ்ட் 21 இல் ரூபா 353 மில்லியன் கிரயத்தில் நூரிஸ் கேனலினை மேம்படுத்துவதற்காக ஒப்பந்தத்தினை கையளித்திருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 23 இல் பூர்த்திசெய்ய உடன்பட்டிருந்தது. இருப்பினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேம்படுத்தல் வேலைகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல் முறையே 85 சதவீதம் மற்றும் 68 சதவீதமான மந்தகதியான செயலாற்றலை காட்டியது. மேலும் இவ் ஒப்பந்தத்தின் கீழாக அர்நோல்ட் ரத்னாயக்க மாவத்தையிலுள்ள சீஎம்சீ அடுக்குமாடி கட்டிடங்களின் தகர்த்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக்காரணங்களின் காரணமாக அடுக்குமாடிக் கட்டிடங்களின் இருபக்கங்களிலும் இருந்து நிர்மானிக்க மும்மொழியப்பட்ட வடிகான்களின் நிர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மான வேலைகள் செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யப்பட முடியாமல் போகலாம். | இவ் உபசெயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 வரை அமுல்படுத்தப்பட்ட வேலைகளிற்கான கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளிற்குள்ளும் செய்யப்பட்டிருந்தது.<br>சீஎம்சீ ஆர்நோல்ட் ரத்னாயக்கா வீதியில் அமைந்துள்ள பாலடைந்த நிலமையில் உள்ள முன்று மாடி கட்டிடத்தை அகற்ற முடியாமல் போகக்கூடும். வீட்டுத்தொகுதிகளின் குடியிருப்பாளர் & உரிமையாளர்கள் சட்ட நடவடிக்கைகள் எடுத்ததனால் கட்டிடத்தின் தகர்த்தல் இன்னும் ஆரம்பிக்கப்பட முடியாமல் போகக்கூடும். | தற்போதைய செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மிகுதி நிர்மான வேலைகளை விரைவுபடுத்த சீர் செய்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் டொரிங்டன் மற்றும் புதிய முகத்துவார கால்வாய்கள் போன்றனவற்றின் நிர்மானத்தின் கீழான வேலை ஒப்பந்தங்களை கையளிப்பதில் தாமதம், 2019 ஆம் ஆண்டில் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கோவிட் 19 நோய்த்தொற்று பரவல் போன்ற பல்வேறு காரணங்களினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலக்கிடப்பட்ட 97 சதவீதத்திற்கு பின்னால் காணப்பட்டது. மேலும் நிலத்தடி நிலஅளவையானது ஒப்பந்த கையளிப்பிற்கு முன்னர் நடாத்தப்பட்டிராததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மான வேலைகள் 2020 மே 30 இல் பூர்த்திசெய்யப்பட வேண்டும். பூர்த்தியாக்கல் திகதி 2021 நவம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தும் ஒப்பந்த வேலைகள் செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இன் முடிவில் உள்ளவாறான வேலைகளின் செயலாற்றல் 97 சதவீதமாக இருந்தும் கண்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டிருந்தவைகள் உள்ளடங்களாக பல்வேறு காரணங்கள் காரணமாக உண்மையான பூர்த்தியாக்கல் 2022 ஏப்ரல் 30 இல் அடையப்பட்டிருந்தது. இவ்வகையான நிர்மான வேலைகளில் தேவையான நிலத்தடி நிலஅளவை வேலைகளினை செய்வதற்கு அது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.<br>உண்மையான ஒப்பந்த பூர்த்தியாக்கல் திகதி 2020 மே முடிவிலாக இருந்தும் பல்வேறு காரணங்கள் காரணமாக வேலைகள் உண்மையான செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்ய முடியாமல் போகக்கூடும். | திடகாத்திரமானதும் வினைத்திறனானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமையானது செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதனூடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைய அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | புதிய கட்டிடத்திலுள்ள ஆர்சீடி முறைமையின் நடவடிக்கைகள் மத்திய வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டிற்கான கட்டிடங்கள் மீதான நிர்மான வேலைகள் காரணமாக ஆரம்பிக்க முடியாமல் இருந்ததுடன் கிரிமண்டல மாவத்தை கொழும்பு 05 இலுள்ள நீர் முகாமைத்துவம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக கணணிகள், மொனிட்டர்கள், சர்வர்கள் போன்ற இம்முறைமையுடன் தொடர்புபட்ட உதிரிப்பாகங்களை பொருத்துவதற்கு ஓர் நிலையான இடமும் இல்லை. 2021 திசெம்பர் 31 இல் செயற்திட்டத்தினை முடிவுறுத்தும் போது மேற்கூறிய பெறுகை நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் பயன்படுத்த முடியாமல் போகக்கூடும். எனவே கூட்டுமொத்தம் ரூபா 423 மில்லியன் 2022 மேலதிக வரிசை பாதீட்டின் ஊடாக இவ்வேலையின் பூர்த்தியாக்கலிற்காக இலங்கை அரசாங்கத்திடமிரந்து வேண்டப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 163 மில்லியனான ஓர் ஒதுக்கீடு அவசரத்திற்காக பெறப்பட்டிருந்தது. | ஐஎப்எம்எஸ் இனை நிறுவுவதற்காக கிரிமண்டல மாவத்தையில் அமைச்சின் கீழ் நிர்மானிக்கப்படுகின்ற கட்டிடம் 2021 திசெம்பர் 31 அளவில் தயாராக இருக்கவில்லை. கட்டிடத்தின் பூர்த்தியாக்கலுடன் தற்போது தற்காலிக இடத்திலிருந்து நிலையான இடத்திற்கு ஆர்டிசீ முறைமை நகர்த்தப்படுகின்றது. சில பெறுகைகள் கோவிட் 19 நோய்ப்பரவல் காரணத்தினாலான இறக்குமதி வரையறைகள் விதிக்கப்பட்டமை மற்றும் நாட்டின் தற்போதைய நிலமை மற்றும் அதேபோல் கட்டிடங்கள் பூர்த்திசெய்யப்படாமை போன்றன காரணமாக தாமதமடைந்திருந்தது. ஒட்டுமொத்தம் ரூபா 207 மில்லியன் (ஐஎப்எம்எஸ் உடன் நேரடியாக தொடர்புபட்ட ரூபா 172 மில்லியன் தொகையான உருப்படிகள் மற்றும் புதிய கட்டிடத்திற்கான சேவைகளிற்கான ரூபா 35 மில்லியன்) 2022 இல் இவ் உருப்படிகளை பெறுகை செய்யவும் 2023 காலாண்டு 1 இல் கொடுப்பனவுகளை பூர்த்திசெய்யவும் உள்நாட்டு பாதீட்டிலிருந்து வேண்டப்பட்டிருந்தது. | திடகாத்திரமானதும் வினைத்திறனானதுமான செயற்திட்ட முகாமைத்துவ முறைமையானது செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதனூடாக செயற்திட்ட நோக்கத்தினை அடைய அமுல்படுத்தப்படல் வேண்டும். |

### 3.3 பயன்அற்ற/பயன்படுத்தப்படாத/குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2013 திசெம்பரில் ரூபா 27.22 மில்லியன் கிரயத்தில் ஓர் ஆலோசனை நிறுவனத்திற்கு பம்பலப்பிட்டிய மற்றும் கொள்ளுப்பிட்டியவிலுள்ள பாதசாரி மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் மேற்பார்வைக்காக ஆலோசனை சேவையின் 02 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் வடிவமைப்பு வேலைகளை 10 வாரங்களிற்குள் பூர்த்திசெய்ய உடன்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டமானது | ஆலோசனை நிறுவனம் கட்டிடக்கலை மற்றும் கட்டமைப்பு வரைபடங்கள், ஏல ஆவணங்கள் போன்றனவற்றினை தயாரித்தல் உள்ளடங்களாக அவ்விரண்டு அடையாளப்படுத்தப்பட்ட வேலைகளின் வடிவமைப்புடன் தொடர்புபட்ட சில வேலைகளை செய்துள்ளது. அது பின்னர் கொழும்பு மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.<br>புதிய கட்டிடம் 2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட | நோக்கங்களுடன் இணங்கி ஒழுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வேலைகளை கைவிட்டு அக்கட்டத்தில் மெகாபொலிஸ் பிரதான திட்டத்திலிருந்தான நிதி மற்றும் ஏனைய தடங்கள்கள் காரணம் என கூறி 2016 மே 23 இல் ஆலோசனை நிறுவனம் அறிவித்திருந்தது. இருப்பினும் கூட்டுமொத்தம் ரூபா 21.79 மில்லியன் நடுவர்தீர்ப்பு நியாயசபையின் கண்காணிப்புடன் ஆலோசகருடன் நேர அடிப்படையில் கைவிடப்பட்ட பிரிவினை அறிவிக்க தவறியதன் காரணமாக ஆலோசனைக்கட்டணங்களாக ஆலோசனை நிறுவனத்திற்கு செலுத்தவேண்டியிருந்தது. | போது ஓர் நிறுவன உத்தரவு பாதசாரிகள் மேம்பாலங்களின் நிர்மான வேலைகளின் தொடர்ச்சியான தன்மை தொடர்பான செயற்திட்ட குழுவிற்கு ஆரம்ப கட்டத்தில் வழங்கியிருக்கவில்லை. இருப்பினும் நிறுவன அறிவுறுத்தல்களின் வராமையில் ஆலோசகர்கள் வேலைகளை கைவிடுவதற்காக முறையான கட்டளை வழங்கப்படும் வரை அவர்களது வேலைகளுடன் தொடர்ந்திருந்தனர்.<br><br>ஆலோசகர்கள் தனிப்பட்ட ரீதியில் மேலதிகமாக செய்யப்பட்ட வேலைகளிற்கான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக அனைத்து அமுல்படுத்தப்பட்ட வேலைகளிற்கான கொடுப்பனவுகளை கோரியுள்ளனர். ஆனால் ஆலோசகர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையில் விபரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>நடுவர் தீர்ப்பு செயன்முறையின் ஊடாக விடயமானது இறுதியாக தீர்க்கப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவு வழங்கப்பட்ட நடுவுர் தீர்ப்பின் பிரகாரம் செய்யவேண்டியிருந்தது. | |
| (ஆ) | கூட்டுமொத்தம் ரூபா 1,000,575 2015 இல் செயற்திட்ட கணக்கீடுகள் மற்றும் செயற்திட்ட மீளாய்விற்கான ஓர் கணணி மென்பொருளினை பெறுவதற்காக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் மென்பொருள் ஆனது 2020 ஜூன் வரை நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட மென்பொருளை பயன்படுத்துவதற்கு அது சாத்தியமற்ற ஒன்றாக காணப்பட்டது. | மென்பொருள் விருத்தி செயன்முறை பல்வேறு காரணங்கள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் வேலையிலிருந்து வெளியேறியதன் காரணமாக பீஎம்யூ வின் உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான இடைவெளியிலான மாற்றங்கள் போன்றன காரணமாக செய்யமுடியாமல் இருந்தது. 2021 இல் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டமை மற்றும் எஸ்எல்ஐஐடி தொழிநுட்ப உத்தியோகத்தர்காணப்படாமை போன்றன காரணமாக கணக்கீட்டு மென்பொருளின் மிகுதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் தொடர்பாக சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |